பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

18 08 2024 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் உருவம் பொறித்த 100 ரூபாய் நினைவு நாணயத்தை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் இன்று வெளியிடுகிறார்.

2. வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் அரசுமுறைப் பயணமாக இன்று குவைத் புறப்பட்டுச் செல்கிறார்.

3. வளரும் நாடுகளின் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள் உறுதி செய்யப்படும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

4. மருத்துவர்கள் மற்றும் சுகாதார பணியாளர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கும் வகையில் சட்டம் ஒன்று கொண்டுவரப்பட வேண்டும் என்று இந்திய மருத்துவ சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

5. பஞ்சாபில் அங்கன்வாடி பணியாளர்களுக்காக மூவாயிரம் புதிய பணியிடங்கள் உருவாக்கப்படும் என்று அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் கடலோர காவல்படையின் கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தின் புதிய கட்டிடத்தையும், கடல்சார் மாசு மீட்பு மையத்தையும் சென்னையில் இன்று திறந்து வைக்கிறார்.

கடல்சார் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலும் அவசர கால சூழலில் மீட்பு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள உதவிடும் வகையிலும் இந்த மையம் செயல்படும்.

கடற்கரைப் பகுதிகளில் எண்ணெய் மற்றும் ரசாயனப் பொருட்கள் கலப்பதால் ஏற்படும் மாசிலிருந்து மீட்கும் நடவடிக்கைகளில் கடல்சார் மாசு மீட்பு மையம் முக்கியப் பங்கு வகிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவில் அவரது உருவம் பொறித்த நினைவு நாணயத்தையும் திரு. ராஜ்நாத் சிங் வெளியிடுகிறார்.

புதுச்சேரி கடலோர காவல்படை விமானதள வளாகத்தையும் அமைச்சர் இன்று திறந்து வைக்கிறார்.

<<<>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் அரசுமுறைப் பயணமாக இன்று குவைத் புறப்பட்டுச் செல்கிறார்.

அவரது இந்தப் பயணத்தின்போது அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. அப்துல்லா அலி அல்-யஹ்யா-வை சந்தித்துப் பேச்சு நடத்துகிறார்.

இந்த சந்திப்பின்போது மண்டல மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து பரஸ்பரம் தங்களது கருத்துக்களை பகிர்ந்துகொள்வதுடன், தெற்காசியா மற்றும் மத்திய கிழக்குப் பகுதிகளில் நிலவும் அரசியல் சூழல் குறித்தும் விவாதிக்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அரசியல், வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, பாதுகாப்பு, கலாச்சாரம் மற்றும் மக்கள் தொடர்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் இரு நாடுகளும் இணைந்து செயல்படுவது குறித்து விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<>>>>

மருத்துவர்கள் மற்றும் சுகாதார பணியாளர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கும் வகையில் சட்டம் ஒன்று கொண்டுவரப்பட வேண்டும் என்று இந்திய மருத்துவ சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு இந்த சங்கம் எழுதியுள்ள கடிதத்தில், நாட்டில் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும், விமான நிலையங்களில் உள்ளது போன்று பாதுகாப்பு தொடர்பான அம்சங்களை வலுப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மருத்துவமனைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் அவை அமைந்திருக்கும் பகுதிகள் பாதுகாப்பு மண்டலங்களாக அறிவிக்கப்பட வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொல்கத்தாவில் பெண் மருத்துவர் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணையில் பிரதமர் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சம்பவத்திற்கு விரைந்து நீதி கிடைத்திடும் வகையில் குறிப்பிட்ட கால வரையறைக்குள் விசாரணைகள் முடிக்கப்பட வேண்டும் என்றும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே இச்சம்பவத்தைக் கண்டித்து நாடு முழுவதும் மருத்துவர்கள் 24 மணி நேர வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் மக்களின் நலன் கருதி மருத்துவ சேவைகளை தடையின்றி மேற்கொள்ளவும், மருத்துவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்கும் வகையில் குழு ஒன்று விரைவில் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே தமிழகத்தில் உள்ள தனியார் மருத்துவமனைகளில் புறநோயாளிகளுக்கான மருத்துவ சேவைகளும், சில குறிப்பிட்ட அறுவை சிகிச்சைகளும் ரத்து செய்யப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசு மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

வளரும் நாடுகளின் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள் உறுதி செய்யப்படும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

வளரும் நாடுகளின் உச்சிமாநாட்டில் கலந்துகொண்டு பேசிய அவர், மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளில் இத்தகைய நாடுகள் எதிர்கொள்ளும் சவால்களைக் களைவதில் உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடைவதில் வளரும் நாடுகளுக்கு போதிய நிதியுதவி அளிக்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

<<<<>>>>

கால்நடைகளுக்கு ஏற்படும் தொற்றுநோய்களை தடுப்பூசிகள் மூலம் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மத்திய கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை ஆய்வு செய்த அவர், கால்நடைகளுக்கு தொற்று பாதிப்பு இல்லாத நிலை வரும் 2030ஆம் ஆண்டுக்குள் உறுதி செய்யப்படும் என்று கூறினார்.

இதற்கான செயல்திட்டங்கள் குறித்து இந்த ஆய்வுக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கர்நாடகா, தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், தெலங்கானா, உத்தராகண்ட், பஞ்சாப், ஹரியானா, மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களில் தொற்றுநோய் இல்லாத பகுதிகளை உருவாக்குவதற்கான மதிப்பீடுகள் குறித்த அறிக்கை பெறப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

<<<<>>>>

பஞ்சாபில் அங்கன்வாடி பணியாளர்களுக்காக மூவாயிரம் புதிய பணியிடங்கள் உருவாக்கப்படும் என்று அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

ரக்ஷாபந்தன் விழாவையொட்டி பர்னாலாவில் மாநில அரசின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், பெண்களின் நலன்களுக்காக இந்தப் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதாக அம்மாநில முதலமைச்சர் திரு. பகவந்த்சிங் மான் கூறினார்.

இதற்கான நடைமுறைகளை மாநில அரசு ஏற்கனவே தொடங்கியுள்ளதாகவும், பணியாளர்கள் விரைவில் தேர்வு செய்யப்படுவார்கள் எனவும் அவர் கூறினார்.

மகளிருக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் மாநில அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை அம்மாநில முதலமைச்சர் பட்டியலிட்டார்.

<<<<>>>>

மக்கள் நல்வாழ்வுத்துறையில் உள்ள காலிப் பணியிடங்கள் தேர்வுகள் மூலம் முறைப்படி நிரப்பப்பட்டு வருவதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

கர்பிணிப் பெண்களுக்கு மருத்துவ ரீதியான அறிவுரைகள் வழங்கும் வகையில் தாய்சேய் நல தொலைபேசி சேவையை அவர் தொடங்கி வைத்தார்.

இதற்கென இந்த சேவை மையத்தில் 50 ஆலோசகர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஒவ்வொரு கர்பிணிப் பெண்களுக்கும் குறைந்தபட்சம் 5 தொலைபேசி அழைப்புகள் மூலம் தொடர்புகொண்டு அவர்கள் பெற்று வரும் சிகிச்சை முறைகள், உடல்நலம் மற்றும் தேவையான மருத்துவ உதவிகள் ஆகியவற்றைக் கேட்டறிந்து அவர்களுக்கு உரிய ஆலோசனை வழங்கப்படும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிக பாரம் ஏற்றிச் செல்லும் வாகனங்கள் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம் மார்தாண்டத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அத்தகைய வாகனங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இம்மாவட்டத்தில் சிற்றாறு படகு சேவையை தொடங்குவதற்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருவதாக அவர் கூறினார்.

வெள்ளப்பெருக்கால் ஏதேனும் பாதிப்பு ஏற்படுமா என்பது குறித்து ஆய்வு செய்த பின்னர் படகு சேவையை தொடங்குவது குறித்து முடிவு எடுக்கப்படும் என்றும் திரு. மனோ தங்கராஜ் கூறினார்.

<<<<>>>>

மக்களை மையமாகக் கொண்ட தொழில்நுட்பம் அடிப்படையிலான நவீன சட்ட நடைமுறைகள் மேம்படுத்தப்படும் என்று மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மேக்வால் தெரிவித்துள்ளார்.

கேரள உயர்நீதிமன்றத்தில் நேற்று சமரச மையத்தை தொடங்கி வைத்துப் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

நிலுவையில் உள்ள அதிக எண்ணிக்கையிலான வழக்குகள் மிகப்பெரிய சவாலாக உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

வழக்குகளுக்கு விரைந்து தீர்வு காண்பதற்கான சூழலை உருவாக்குவதில் மத்திய அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார்.

<<<<>>>>

புவிசார் குறியீட்டுடன் கூடிய அத்திப்பழச்சாறு போலந்து நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

புனேயில் உள்ள புரந்தர் மாவட்டத்தில் இருந்து இந்தப் பழச்சாறு உற்பத்தி செய்யப்பட்டு முதன்முறையாக ஏற்றுமதி செய்யப்படுகிறது.

புரந்தரில் உள்ள வேளாண் உற்பத்தி நிறுவனம் மற்றும் வேளாண் மற்றும் பதனிடப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் இணைந்து இந்த அத்திப்பழச்சாறு உற்பத்திக்கான வசதிகளை செய்துள்ளது.

<<<<>>>>

உத்தராகண்ட் மாநிலத்தில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்டிருந்த கேதார்நாத் செல்லும் பாதை சீர்செய்யப்பட்டு மீண்டும் பக்தர்களுக்கு திறந்துவிடப்பட்டுள்ளது.

வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவு காரணமாக கடந்த 15 நாட்களாக இந்தப் பாதை மூடப்பட்டிருந்தது.

19 கிலோ மீட்டர் தொலைவிலான இந்தப் பாதையில் 29 இடங்களில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்டிருந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஆசிய ஜூனியர் பேட்மிட்டன் போட்டிகள் சீனாவில் உள்ள **Chengdu-**வில் நாளை மறுநாள் தொடங்குகிறது.

இதில் இந்தியா சார்பில் 39 வீரர்களைக் கொண்ட அணி பங்கேற்க உள்ளதாக இந்திய பேட்மிட்டன் சங்கம் தெரிவித்துள்ளது.

இப்போட்டியில் அதிகப் பதக்கங்களை வெல்லும் வகையிலும், 2025ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற உள்ள உலக ஜூனியர் பேட்மிட்டன் சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்பதற்கு வலுவான அடித்தளம் அமைக்கும் வகையிலும் அணி தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அச்சங்கம் தெரிவித்துள்ளது.

----------------

**Santo Domingo** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - பிரேசிலின் **Fernando Romboli** இணை தோல்வியடைந்தது.

இன்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் மெக்சிகோவின் **Miguel Angel Reyes Varela –** ஈக்வடாரின் **Diego Hidalgo** இணை 6-7, 6-4, 6-4 என்ற செட் கணக்கில் இந்திய இணையை வென்றது.

**<<<<The End>>>>**